# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா 5.00

முரசு 16 ஒலி 57 பிரசோற்பத்தி தை 09 (23-01-1992) வியாழன்

## நெடுந்தீவிலிருந்து 28 பேர் நேற்றுக் கப்பலில் வந்தனர்

நெடுந்தீவில் இருந்து நேற்று 28 பேர் குமணகப்பலில் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டனர். இவர்களில் ஆறு பெண்கள் அடங்குவர். கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள் இராணுவ நடவடிக்கையின் போது அங்கு சிக்கியிருந்தனர். நேற்று முன்தினம் மாலை 5மணிக்கு படகுகள் மூலம் கப்பலில் ஏற்றப்பட்டு நேற்றுக் காலை 6.30க்கு குமண கப்பலில்

—04 ஆம் பக்கம் பார்க்க

# வன்னியில் இரு தாக்குதல்கள்

# 14 இராணுவத்தினர் பலி!

## ஐந்து சிப்பாய்களின் சடலங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

நேற்று வவுனியாவில் விடுதலைப்புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் 14இராணுவத்தினர் பலியாகினர். ஆயுதங்களும் மீட்கப்பட்டன வவுனியா கணேசபுரம், மாமடு படையினர் மீதே தாக்குதல்கள் நடைபெற்றன.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் வவுனியா மாமடு எல்லைப்பகுதி இராணுவக் காவலரணிலிருந்து படையினர் வெளியேறினர்.

வெளியேறிய படையினர் மீது காவலரணிலிருந்து 100 யார் தூரத்தில் வைத்து புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். இதனால் வெளியேறிய படையினரில் நால்வர் பலியாகினர்.

படையினர் மீது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது மாமடு காவலரணிலிருந்து உதவிக்கு வந்த படையினர் மீதும் புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதல் நடத்தி விரட்டியடித்தது.

இதேசமயம் வவுனியா கணேசபுரம் காவலரண் பகுதியிலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் மீது புலிகள் பலத்த தாக்குதலை நடத்தினர்.

இதனால் 10 படையினர் ஸ்தலத்தில் பலியாகினர் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பலியான 5 படையினரின் சடலங்களுடன் முகாமுக்கு பின்வாங்கினர்

விடுதலைப்புலிகளால் இராணுவத்தினரின் 5சடலங்களும் மீட்கப்பட்டன.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

வவுனியாவில் நடைபெற்ற தாக்குதல்களில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

ஏ கே எல்.எம் ஜி-1 .ஜி-3 ஏ 3 துப்பாக்கி-1, ரி-81-2, ரி-56 1-3, ரி-56 II-4 ரி-56 பட்மொடல்-1, ஏ கே எல் எம் ஜி ரம்மகஸின்-1, ஜி-3 மகஸின்-1, ரி-81 மகஸின்-5 ரி-56 மகஸின்-3, 7 62 ஐ எம் ரவைகள்-607 நே ட்டோ ரவைகள்-20, ஜே.ஆர் குண்டுகள்-5

## 10 வருடங்கள் செல்லும்!

இலங்கையில் அகதிகளின் பிரச்சினை தீர குறைந்தது 10 வருடங்களாவது செல்லலாம் என திருமலையைச்சேர்ந்த எம்.பி ஒருவர் குறிப்பிட்டதாக பி, பி ஸி தெரிவித்தது,

## பல்கலைக்கழக போதனாசிரியர் கைது

ஜெயவர்த்தனா பல்கலைக்கழக கணித போதனாசிரியர் ஒருவர் அவசர காலச் சட்டத்தின் கீழ் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஜே. வி. பி இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாகவும், ஐ. தே க பொதுச்செயலர், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர், துணைவேந்தர் ரொன்லி விஜயசுந்தர உட்பட பலரது கொலைகளுடன் இவருக்கு தொடர்பு இருப்பதாகவும் சந்தேகப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 20 விமானத்தள கட்டிடங்கள் முற்றாக அழிந்துள்ளன!

நேற்று முன்தினம் சீனன்குடா விமானப்படைத்தள குண்டுவெடிப்பினால் சுமார் 20 விமானப்படைக் கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

விமானங்கள் நிறுத்தப்படும் தரிப்பிடம், விமானப் படையினர் ஓய்வு விடுதி, உணவு விடுதி உட்பட மாடிக் கட்டிடங்கள் பல சேதமடைந்துள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று அறிவித்தது

இதேவேளை சேதமடைந்த கட்டிட இடிபாடுகளை அகற்ற பல நாள்கள் செல்லலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## இரத்தினபுரியில் பொங்கலன்று பொலிஸார் தேடுதல்

இரத்தினபுரியில் தைப்பொங்கல் தினத்தன்று பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமிழ்த்தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில தோட்டப்பகுதிகளில், தேடுதல் நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## குண்டு தயாரிக்கும் பகுதியில் வெடிகுண்டு வெடித்ததாம்!

விமானப்படையினருக்கு தேவையான குண்டுகளை தயாரிக்கும் ஆயுதப்பகுதியிலேயே குண்டு வெடிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட விமானக் குண்டுகள், வெடிமருந்துகள், முக்கியமான ஆயுத பகுதி விவரக் கோவைகள் என்பன முற்றாக அழிந்து விட்டதாகவும் நேற்று கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்தது.

## பாதுகாப்பு அமைச்சு உயர்குழு சீனன்குடா சென்றது

சீனன்குடா விமானப்படைதளத்திற்கு ஏற்பட்ட சேதத்தைபார்வையிட நேற்று காலை பிரதமர் விஜேதுங்க' பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்க, கூட்டுப்படைத்தளபதி ஹமில்டன் விமானப்படைத்தளபதி ரெரன்ஸ்குணவர்த்தனா ஆகியோர் சென்றனர்.

இவர்கள் திருமலை வைத்தியசாலைக்கும் சென்று காயமடைந்து சிகிச்சை பெறும் விமானப் படையினரை பார்வையிட்டனர்.

விமானப்படை வைத்தியசாலையில் காயமடைந்தவர்

... 04ஆம் பக்கம் பார்க்க

## இடிபாடுகள் அகற்றப்படுகின்றன சடலங்கள் தொகையும் அதிகரிப்பு

சீனன் குடா விமானத்தள குண்டுவெடிப்பினால் காயமடைந்த விமானப்படையினரின் தொகை 100 ஆக அதிகரித்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

பலியான விமானப்படையினரில் 14பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும், 11 படையினரைக் காணவில்லை எனவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானப்படைத்தளத்தின் இடிபாடுகள் தொடர்ந்து அகற்றப்பட்டுவருவதால் மீட்கப்படும் படையினரின் சடலங்களும் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## விமானத்தளம் செயலிழப்பு வேறுபகுதிக்கு மாறும்!

சீனன்குடா விமானப்படைதள குண்டுவெடிப்பையடுத்து தளத்தை சில மாத காலத்துக்கு உபயோகிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது.

இதனால் வேறு ஒரு பகுதியிலேயே விமானத்தளத்தை இயக்கவேண்டி இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்

சீனன்குடா விமானப்படைத்தளமே கிழக்குப்பகுதி நடவடிக்கைகளுக்கு கேந்திர நிலையமாக இருந்துவந்தது தெரிந்ததே.

★ சூழஇருந்த காடு எரிந்தது!
★ ஒடுபாதை எங்கும் குழிகள்!
★ விமானங்களின் பாகங்களைக் காணவில்லை!
★ அரைமணி நேரம் புகைமண்டலம் எழுந்ததாம்!

## சீனன்குடா சேதங்கள் ரூபவாஹினியில்

சீனன்குடா விமானத்தளத்தில் வெடித்த வெடிகுண்டினால் தளத்தைச் சூழ இருந்த காட்டுப்பகுதி எரிந்து காணப்பட்டது.

சீனன்குடா சேதங்களின் ஒரு பகுதியை நேற்றிரவு ரூபவாஹினி ஒளிபரப்பியது

பாரிய மரங்கள் வேரோடு சரிந்து காணப்பட்டன.

விமானதளத்திலுள்ள அநேகமான கட்டிடங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

ஒரு பகுதியில் பெரிய விட்டமுடைய பாரிய குழி ஒன்றும் காணப்பட்டது.

ஹெலிகப்டர்கள், சீபிளேன்கள், இராணுவ போக்குவரத்து விமானங்களின் சேதங்களையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது.

ஹெலிகப்டர்களின் முன் பக்க கண்ணாடிகள் சிதறி

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தொண்டாவின் நேற்றைய அறிவிப்பு } 3 மாதத்தில் தீர்வு

### அதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு காணும் சூழல் ஒன்று தற்பொழுது உருவாகி வருகிறது என கிராமிய தொழிற்றுறை அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான தொண்டமான் நேற்று தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரச்சினையில் வீணே காலம் கடத்துவது புத்திசாலித்தனமல்ல, மூன்று மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படல் வேண்டுமென அமைச்சர் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

## மேலும் 12 நாடுகளுக்கு எயர்லங்கா விமான சேவை!

எயர்லங்கா நிறுவனம் தனது சர்வதேச விமான சேவையை விரைவில் மேலும் விஸ்தரிக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

டென்மார்க், சுவீடன், ஸ்பெயின், நியூஸிலாந்து, இந்தோனேஸியா, பிலிப்பைன்ஸ், கொரியா, தாய்வான், நேபாளம், யோடான், லெபனான், கென்னியா ஆகிய பன்னிரெண்டு நாடுகளுக்கான விமான சேவைகளை எயர்லங்கா நிறுவனம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்புக்கும் - ஈரான் தலைநகர் தெஹரானுக்குமிடையே நேரடி விமான சேவையொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## மதுராந்தகம் சம்பவம் படுக்கை விரிப்பு கைதிகள் தப்ப உதவியது!

தமிழகம் மதுராந்தகம் சப்ஜெயிலில் இருந்து தப்பிய இலங்கையர்களைத் தேடிப் பொலிஸார் வலைவிரித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிறையிலிருந்த எட்டு இலங்கைத் தமிழர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தப்பிச் சென்றிருந்தனர்.

சிறையில் ஜன்னல் கம்பிகளை வெட்டி, படுக்கை விரிப்புக்களின் துணையோடு இவர்கள் வெளியே தப்பிச் சென்றதாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

## மீனவருக்கு வலை வீசும் இராணுவம்!

### ஒருவர் சிக்கினார் மற்றையவர் தப்பினார்

மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த இருவரில் ஒருவர் இராணுவத்தின் வலையில் சிக்கினார். மற்றவர் சாதுரியமாகத் தப்பி வந்து விட்டார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை பூநகரி-கல்முனைப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

து. கன்யூசியால் (32 வயது) பொ. ஜெயக்குமாரி 34 வயது) என்ற இரு குருநகர் மீனவர்கள் சம்பவதினத்தன்று சிறகுவலை மூலம் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் முதலாமவரை அப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பிடித்துச் சென்று விட்டனர். மற்றவர் நீந்தித் தப்பி விட்டார். (16)

## உடுகம்பொலவின் இடத்திற்கு டி. ஐ. ஜி. இராஜபக்ஸ நியமனம்

பொலிஸ் விசேட நடவடிக்கைப் பணியகத்தின் புதிய தலைவராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் என். டி. ஏ. இராஜபக்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய இப் பணியகத்தின் தலைவராகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல கடமையாற்றி வந்தமையும் பின்னர் அவர் மூன்று மாத கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருந்தமையும் தெரிந்ததே.

உடுகம்பொலவின் நடவடிக்கைகள் பல உள்நாட்டு, வெளிநாட்டு வெகுஜன அமைப்புக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமையும், இந்த விசேட நடவடிக்கைப் பொலிஸாரின் ஆயுதங்கள் களையப்பட்டு விட்டதாக அரசு சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட சட்ட விதி விரிவுரை வகுப்புக்கள்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் உதைபந்தாட்ட சட்ட விதிகள் பற்றிய விரிவுரை வகுப்புகளை எதிர்வரும் சனிக்கிழமை (25.1.92) தொடக்கம், சனி ஞாயிறு தினங்களில் காலை 9 மணியிலிருந்து தொடர்ச்சியாக மார்ச் மாத இறுதிவரை யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடாத்தவுள்ளது.

இவ் விரிவுரை வகுப்புகளில் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உதைபந்தாட்ட வீரர்கள் உதைபந்தாட்ட பிரியர்கள் யாவரும் வயதுக் கட்டுப்பாடின்றி கலந்து கொள்ளலாம் என பரீட்சைக் குழுத் தலைவர் கே.என்.வை. மொறிஸ் தெரிவித்துள்ளார்.

விரிவுரை வகுப்புகளை அனுபவமும், ஆற்றலும் மிக்க உதைபந்தாட்ட வல்லுநர்கள் நடாத்தவுள்ளனர். (16)

## ஸ்ரீலங்கா கோரப்போகும் உதவி... தொகையைக் கூற மந்திரி தயக்கம்

பாரிஸில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்திற்கு இலங்கைத் தூதுக்குழுவுக்கு பிரதமரும் நிதி அமைச்சருமான விஜயதுங்க தலைமை தாங்குவார் எனத் தெரியவருகிறது.

இத் தகவலை அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இக் குழுவிடம் எவ்வளவு தொகை உதவியாகக் கேட்கப்போவதாக வினவப்பட்டபோது, ஸ்ரீலங்கா கேட்க இருக்கும் தொகையை வெளியிட மறுத்த அமைச்சர் "எவ்வளவு பெறுவோம் என்பது குழுக் கூட்டம் முடிவுற்ற பின்பு தான் தெரியவரும், அப்போது எவ்வளவு பெற்றோம் என்பதை வெளிப்படுத்துவோம் என்றார்,

உதவி வழங்கும் குழுவின் வருடாந்தக் கூட்டத்திற்கு முன்பு ஸ்ரீலங்காவுக்கு எவ்வித உதவியும் கிடைக்கமாட்டாதெனக் கூறப்பட்டதேயெனக் கேட்கப்பட்டபோது, குழுக் கூட்டம் நடைபெறும்வரை காத்திருப்போமெனக் கூறினார்.

## ஜொலிஸ்ரார் முன்னணியில்

ராஜன், விக்கிரம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக, கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினரால் கொக்குவில் ம ச நி அணி, ஷப்றா அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஆகிய மூன்று அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் 30 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி கடந்த 18ஆம் திகதி தொடக்கம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஜொலிஸ்ரார் அணி முன்னணியில் நிற்கிறது. (16)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை அங்கத்தினர்க்கான

**விசேட கூட்டம் 1992**

ஒவ்வொரு பிரிவிலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றும் கூட்டம் எதிர்வரும் 26-01-1992 முற்பகல் 10.00 மணிக்கு, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுபற்றி விரிவாக ஆராயப்படும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
21-01-92

ச. சிவானந்தராசா
கௌரவசெயலாளர்

01066

## அமெரிக்க செனட்டருக்கு ஒன்றரைநாளில்புரிந்த 'இரகஸியம்'

இலங்கை அரசு ஜனநாயக வழியில் செயற்பட்டு வருவதாகக் கொழும்பு வந்திருந்த அமெரிக்க செனட்டர் லவி பிரெஸ்லர் பாராட்டியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒன்றரை நாள் குறுகிய கால விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க செனட்டர் அவ்வேளையில் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சென்னையிலிருந்து துபாய்க்கு விரைவில் நேரடி விமான சேவை

சென்னைக்கும் துபாய்க்குமிடையே விரைவில் நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சென்னையிலிருந்து ஏனைய நாடுகளுக்கான மேலும் சில சர்வதேச நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கும் தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அடக்க வந்த அதிகாரியை கடத்திச் சென்றனர் தீவிரவாதிகள்

இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் அந்த மாநிலத்தில் வைத்தே கடத்திச்செல்லப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

காஷ்மீருக்குப் பொறுப்பாக இரு தினங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட லதார் என்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரே கடத்தப்பட்டவராவார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினரே இவரை கடத்தினராம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஏலவிற்பனை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் பின்வரும் திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.

1. இடம் : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
திகதி : 29-01-92
நேரம் : காலை 10 மணி

பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| வாளி | - 01 | கிளிப்படிக்கும் இயந்திரம் | 02 |
| கதிரை | - 03 | மணிக்கூடு | - 04 |
| மின்சார கேத்தில் | - 05 | வாளி | - 02 |
| கண்ணாடி | - 01 | இரும்புப் பெட்டி | - 01 |
| புற்பாய் | - 43 | மரறாக்கை | - 01 |
| அலுவலக கோவைத் தட்டு | - 01 | மேசை | - 02 |
| துவிச்சக்கர வண்டி | - 01 | பற்றுச் சீட்டு இயந்திரம் | - 01 |
| பட்டபிரதி பண்ணும் இயந்திரம் | - 01 | | |
| பூட்டு | - 01 | பனைஒலை (வெட்டி எடுக்கப்படல் வேண்டும்) | - 06மரம் |
| தண்ணீர் வடி கட்டி | - 01 | தறித்த கோணல் புளியமரம் | -01 |
| கணக்குக் கூட்டும் இயந்திரம் | - 09 | | |

2. இடம் : இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, மருதனாமடம்
திகதி : 01-02-92
நேரம் : காலை 10 மணி

பொருட்கள் :

| | |
|---|---|
| தறிக்காததென்னைமரம் | - 02 |
| தறிக்காத வேம்பமரம் | - 01 |
| தறிக்காத புளியமரம் | - 01 |
| தறிக்காத மாமரம் | - 01 |
| தறித்த கோணல் புளியமரம் | - 01 |
| பனை ஒலை (வெட்டி எடுக்கப்படல் வேண்டும்) | - 32 மரம் |

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும் தறிக்கப்படாத மரங்கள், பனை ஓலைகள் மட்டும் ஒருவாரத்தில் அப்புறப்படுத்தப்படல்வேண்டும்.

மேற்படி பொருட்களை 28ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை திருநெல்வேலியிலும், 30 ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை மருதனாமடத்திலும் பல்கலைக்கழக நிதியாளரை தொடர்பு கொண்டு பார்வை இடலாம்

பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
20. 01 92

01065

சென்னையிலிருந்து திருமலைக்கு

# அகதிகளை அனுப்பும் தற்போதைய நடைமுறை

# ஐ.நா.விதிகளுக்கு முரணானது!

## அடிப்படை உரிமை மீறும் செயலெனவும் குற்றச்சாட்டு

இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கைக்கு அகதிகளைத் திருப்பியனுப்பப்படுவதில் கைக்கொள்ளப்படும் நடைமுறை அகதிகளுக்கான ஐ.நா.வின் விதிமுறைகளுக்கு முரண்பாடாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான வழமையான கப்பல் பாதை ராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையிலானதேயாகும். ஆனால் சென்னையிலிருந்து அகதிகளுடன் கப்பல் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளது

### முரணான காரணிகள்

இப்பாதை மாற்றத்துக்குத் தெரிவிக்கப்படும் காரணிகள் முரணாகக் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னாரில் அகதிகளை இறக்க முடியாத நிலையிலும் வவுனியா ஊடாக அகதிகளை எடுத்துச் செல்ல முடியாத நிலையிலும் இம்மக்கள் உண்மையில் விருப்பம் தெரிவித்திருக்கிறார்களா? அல்லது தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழருக்கு எதிரான கெடுபிடிகளின் காரணமாக இந்திய மத்திய அரசினதும், தமிழக மாநில அரசினதும் சந்தேகக் கண்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் தாங்கள் எங்கிருந்தாலும் அகதிகள் தான் என்ற சர்வதேச அந்தஸ்தைப் பெற்று விட்ட மனப்பாங்கில் கட்டாய சம்மதத்திற்கு உட்பட்டிருக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை,

### உயிர்ப்பிச்சை கோரியோர்

சொந்த இடங்களை விட்டு உயிர்ப்பிச்சை கோரிய ஈழத் தமிழரை இந்தியா விரும்பியோ, விரும்பாமலோ திருப்பியனுப்புதல் காலத்திற்கேற்ற நிகழ்வாகக் கருதமுடியாது.

### உரிமை கிடைக்கும் வரை

இலங்கை வாழ் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வட, கிழக்கின் அரசியல் ரீதியான அந்தஸ்தும், அமைதியும் நிலைநாட்டப்படும் வரை இந்தியாவுக்கு ஓடிய அகதிகள் இந்தியாவிலேயே இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பது மனிதாபிமான ரீதியில் வலியுறுத்தப்படவேண்டிய ஒன்றாகும்,

நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான முன்னேற்றப்பாதையில் உந்து சக்தியாக அகதிகள் பிரச்சினை இருக்க முடியும்.

அகதிகளைத் திருப்பியனுப்புவதன் மூலம் தனது பொறுப்புகளிலிருந்து விலகி விட்டதாக இந்தியா கருதக்கூடாது.

இவ்வாறாக அகதிகள் திருப்பியனுப்பப்படுதல் பற்றிய நிலைபற்றி அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்,

## நாட்டு மக்கள் மறக்காததை மறந்த 'விளையாட்டு' அமைச்சு தகுதியை மறைத்து

# தெற்கில் தலைவிரித்தாடுகிறது இனவாதம்!

கொழும்பில் சமீபத்தில் கோலாகலமாக நடைபெற்ற 'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் பெற்றுச் சாதனை படைத்த ஜூலின் போலிவ், தீபிகா சண்முகம் ஆகியோருக்கு 'ஒலிம்பிக்' போட்டிகளில் பங்குபற்றத் தகுதியில்லை எனக் கூறப்பட்டால் அதில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஸ்ரீலங்காவினருக்கு என்ன தகுதியுள்ளது?

இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இச்சர்ச்சையை இப்போது கிளப்பியுள்ள விவகாரம் இதுதான்.

'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கங்கள் பெற்றுச் சாதனை புரிந்த பிரஸ்தாப இருவருக்கும் 'ஒலிம்பிக்' போட்டிகளில் பங்குபெற இடமளிக்காது ஸ்ரீலங்கா விளையாட்டுத்துறை அமைச்சு தட்டிக்கழித்து விட்டது.

இதுபற்றி ஐலண்ட் நிருபர் விளையாட்டுத்துறை அமைச்சை அணுகி வினாவிய பொழுது, 'தவறுதலாக அவர்களை மறந்து விட்டோம்' என்று பதிலளிக்கப்பட்டது.

"என்ன ஆச்சரியம் இது? 'சாவ்' விளையாட்டுப் போட்டி நடைபெற்ற வேளை, சுமார் இரு வார காலம்வரை நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் மறக்காது பேசப்பட்ட பெயர்கள் 'ஜூலின் போலிவ், தீபிகா சண்முகம்.

விளையாட்டுத்துறை அமைச்சு மாத்திரம் இப்பெயர்களை மறந்து விட்டது எப்படி? என்று 'ஐலண்ட' கேள்வி தொடுத்துள்ளது

மேலும் 'ஒலிம்பிக்' போட்டிகளில் பங்குபெற உரிய ஒலிம்பிக்குக்கான தகுதியோ, ஆசிய விளையாட்டுத் தகுதியோ கூட இவ்விருவருக்கும் இருக்கவில்லை என்றும் விளையாட்டுத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது

அவ்வாறாயின் இப்போட்டிக்குத் தெரிவாகிய ஏனைய ஸ்ரீலங்காவினர் பெற்றுள்ள தகுதிதான் என்ன? என்றும் 'ஐலண்ட்' கேட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க பிரஸ்தாப இருவருக்கும் 'ஒலிம்பிக்'குக்கு இடமளிக்கப்படாததற்கு அவர்கள் சிங்கள பௌத்தர்களாக இல்லாதிருப்பதே மூலகாரணமென நம்பப்படுகின்றது

## எல்சல்வடோர் உள்நாட்டுப்போர்; 12 வருடத்தில் 80 ஆயிரம் பேர்பலி!

எல்சல்வடோரில் கடந்த 12 வருடங்களாக இடம் பெற்ற உள்நாட்டுப் போரில் மட்டும் 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் போரினால் எல்சல்வடோரில் ஐந்து இலட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர், 10 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

## புள்ளியிடுதலில் ஏற்பட்ட தவறை சுட்டிக்காட்டியதற்குத்தண்டனை!

பரீட்சைத் திணைக்களத்தில் தமிழ் மாணவர்களின் நிலை பற்றிக் குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஒருவர் உயர் அதிகாரியினால் கண்டிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட பிரிவில் இருந்து வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளாராம்.

வடக்குக் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற 1990 இற்குரிய க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையில் 'நாடகமும் - அரங்கியலும்' பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களின் புள்ளிக் கணிப்பில் ஏற்பட்ட தவறைச் சுட்டிக் காட்டியமையாலேயே இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாம். (20)

### சாம்பியன்

அமரர் ஜீவரெத்தினம் ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய 'செற்அப்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனிஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய மோகனதாஸ 'பி' பிரிவு அணியை 3:2 என்ற செற்கணக்கில் 4:15 15:7,5·15,15:5,15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சாம்பியன் ஆனது. (16)

## கொத்தணி அதிபர்களின் உதவியாளர்கள் நியமனத்தில்

# புதியகட்டுப்பாடு! அதிபர்கள், விசேட ஆசிரியர்களுக்கு இப்பதவி இனி இல்லை!!

★ கொத்தணி அதிபர்களின் உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளோர் தற்போதைய ஆசிரியர்கள் பற்றாக்குறையைக் கருத்தில் எடுத்து பாடசாலை நாட்களில் காலை வேளைகளில் வகுப்புகளில் கற்பித்தல் தொழிலில் ஈடுபட வேண்டும்.

★ ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக் கல்வி நெறி போன்ற விசேட பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களைக் கொத்தணி அதிபர்களின் உதவியாளர்களாக நியமிக்கக் கூடாது

★ அதிபர்களையோ, பிரதி அதிபர்களையோ அல்லது அதிபர் தரத்திலுள்ளோரையோ கொத்தணி அதிபர்களின் உதவியாளர்களாக நியமித்து இருந்தால் அவர்களது நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும். இதற்குப் புதிதாக வேறு தகுதியானவர்களை நியமனம் செய்ய வேண்டும்

இவ்வாறு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

கொத்தணி அதிபர்களின் உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக அவர் சகல கோட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இப்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது, (15)

## பெற்றபாசம் அற்றுவிடவில்லை ஆனால் அதிகாரப்பகிர்வு முற்றாக இல்லை அனுராவுக்கு ஆப்பு!

# 3 உறுப்பினர்களிடமே 3 மாதப் பொறுப்பு!!

சுதந்திரக் கட்சித் தலைவி இந்தியாவுக்கு மூன்று மாத ஓய்வின் பொருட்டு செல்லும் காலத்தில் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கட்சியின் மூன்று சிரேஷ்ட உறுப்பினர்களிடம் ஒப்படைப்பதென தீர்மானித்துள்ளார்

அதேவேளை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தனது மகனான கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார நாயக்காவிடம் பதில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் பணியாற்ற ஒப்படைத்துள்ளார்.

திருமதி பண்டார நாயக்கா இந்தியா செல்லும் வேளை கட்சியின் தலைமைப் பொறுப்பு அனுராவிடம் ஒப்படைக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் கட்சிக்குள் நிலவும் தாய்-மகன் கருத்து வேறுபாடும், அனுரா மீதான உறுப்பினர்கள் பலரின் எதிர்ப்பும் இந்த முடிவுக்கு வழிகோலியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சர்வதேச கலாசார பேரவையில் இலங்கைத்தமிழர்களுக்கும் இடம்

ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச கலாசாரப் பேரவையில் இலங்கைத் தமிழ்க் கலைஞர்களுக்கும் இடம் வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது தமிழ்க் கலைஞர்கள் இந்தியாவிலிருந்து மட்டுமே தெரிவு செய்யப்பட்டுவருகின்றனர்.

சர்வதேச கலாசாரப் பேரவையின் தென்னிந்தியப் பிரதிநிதி, இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள் தெரிவுக்குப் பொறுப்பாக இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### விவேகானந்தர் ஜெயந்தி

சுவாமி விவேகானந்தரின் 129 வது ஜெயந்தி விழா திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

## 'இந்திய நடுவர்கள் பம்பாயில் செய்வது ...' ஆஸி. ஏடுகள் ஆவேசம்

சமீபத்தில் மெல்போனில் அவுஸ்திரேலிய இந்திய அணிகளுக்கிடையே இடம்பெற்ற சர்வதேச ஐந்து நாள் கிரிக்கெட் பந்தயத தொடரில் இரண்டாவது ரெஸ்ரில் நடுவராகக் கடமையாற்றிய அவுஸ்திரேலிய நடுவர் 'வென் கிங்' என்பவரை முன்னைநாள் பிரசித்தி பெற்ற கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கர், 'ஸ்போட்ஸ் ஸ்ரார்' பத்திரிகையில் கடுமையாக விமர்சித்துள்ளார்

கிங் இந்தப் போட்டியில் வழங்கிய ஒருதலைப் பட்சமான தீர்ப்புகள் தவறுதலாக ஏற்பட்டவையல்ல வேண்டும் என்றே தமது நாட்டு அணியை வெல்லச் செய்வதற்காக கொடுக்கப்பட்டவை என்பதை தொலைக்காட்சிப் படங்கள் மிகத் துல்லியமாக பறைசாற்றுகின்றன கடந்த 20 வருடமாக நான் பல முதலாம் தர ரெஸ்ற் மாச்சுகளில் கலந்துகொண்டுள்ளேன். ஆனால் கிங் போல் ஒரு நடுவரைக் காணவில்லை என்று கவஸ்கர் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவுஸ்திரேலிய நடுவர்களின் குறைகளை இந்தியப் பத்திரிகைகள் சுட்டிக் காட்டியமைக்கு பதிலடியாக அவுஸ்திரேலிய பத்திரிகைகள் சில இந்திய நடுவர்கள் பம்பாயில் இறைச்சி வெட்டுபவர்கள் கொலைகாரர் என்று வசைமாரி பொழிந்திருக்கின்றன. (16)

### கூட்டுறவுச் சங்கங்களில்

## சைக்கிள ரயர், ரியூப் லொத்தர் மூலம் வழங்க ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சைக்கிள் ரயர் ரியூப்பை லொத்தர் மூலம் வழங்க தீர்மானித்திருப்பதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாவட்டத்தில் பதிணைந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 13 ஆயிரம் சைக்கிள் ரியூப்களை கொள்வனவு செய்துள்ளன.

பங்கீட்டு முறை அடிப்படையில் ரயர், ரியூப் வழங்குவது கடினமானதாக இருப்பதால் குலுக்கல் மூலம் வழங்க தீர்மானித்துள்ளதாக இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (08)

## குடாநாட்டுத் தபால்கள் அடுத்த வாரமே வரும்?

யாழ் குடாநாட்டுக்கான தபால் பொதிகள் எவையும் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வந்து சேரவில்லை என யாழ் பிரதம தபாற்கந்தோர் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெரும் தொகையானவர்கள் கடந்த சில நாட்களாக அங்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அடுத்தவாரம் முற்பகுதியிலேயே தபாற் பொதிகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்,

தபால் பொதிகள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு கப்பலில் வந்த பின்னரே தமக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் சொன்னார். (06)

## முல்லைத்தீவு இலங்கை வங்கியில் ஆவணங்கள் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு இலங்கை வங்கி மீட்கப்பட்ட ஆவணங்களுடன் புதுக்குடியிருப்பில் இயங்க வைக்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்

இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள் முதல் செயலிழந்த இவ்வங்கியிலிருந்து சில முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டு வவுனியா இலங்கை வங்கியில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட ஆவணங்களில் சில மழை நீரினால் சேதமடைந்திருப்பதாகவும் இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (08)

## சாவ் விளையாட்டுப் போட்டி சிங்களத்தில் தவறுகள்

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை ரூபவாஹினி, வானொலியில் நேர்முக வர்ணனை செய்யும்போது சிங்களத்தில் தவறுகள் இருந்ததாக கொழும்புச்செய்கள் தெரிவித்தன.

விளையாட்டுத் துறையுடன் தொடர்பில்லாதவர் ஒருவர் இதில் செயற்பட்டதாலேயே இந்தத்தவறுகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை தமிழ், ஆங்கில மொழிகளில் சரியான முறையில் வர்ணனை இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## நாகராஜன் பிணையில் செல்வதற்கு அனுமதி

முன்னாள் தமிழக உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் 75 ஆயிரம் ரூபா பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டார்.

எனினும் இவர் வாரம் தோறும் சென்னை உயர் நீதிபதி முன் சமுகமளிக்க வேண்டும் என நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவரது உடல் நிலை குறிப்பாக இதயம் பாதிக்கப்பட்டுள்ளதென்ற மருத்துவ குறிப்பையடுத்தே இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

புதிய பிரிவு
கணக்கியல்
திரு. S. K. பிரபாகரன்
A/L 93 செவ்வாய், வியாழன் 3-4
A/L 92 செவ்வாய், வியாழன் 4-5
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
01058

# நெடுந்தீவில் உள்ளவர்களுக்கு உணவு, மருந்துகள் இல்லை

நெடுந்தீவில் மக்கள் பட்டினியால் வாடுவதாகவும், போதிய மருத்துவ, உணவு வசதிகள் கிடைப்பதில்லை எனவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

மரக்கறிக்காக தும்பங்காய், முசுட்டை, தூதுவளை போன்ற செடி இலைகளை சமைப்பதாகவும் தெரிவித்தனர்.

மக்கள் மத்தியில் பணப் புழக்கம் இல்லை எனவும் பிடிக்கப்படும் மீனை வாங்க முடியாதிருப்பதால் அவற்றை கருவாடாக போடவும் உப்பு கிடைப்பதில்லை எனவும் இதனால் மீன்கள் வீசப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

க. பொ. த பரீட்சை நேரம் கடற்படையினர் நயினாதீவில் இருந்து அரிசியைக் கொண்டு வந்ததாகவும் அதற்கு முன்னர் இருப்பில் இருந்த அரிசி அரைக் கிலோ வீதம் ஒருவருக்கு பணத்துக்கு வழங்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். 16

# தமிழ் அகதிகள் திருமலைக்கு நேற்று நண்பகல் வந்தனர்

தமிழகத்தில் இருந்து முதற்கட்டமாக திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று நண்பகல் திருமலைத் துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் 77 பேர் அரச ஊழியர்கள். இந்த அகதிகள் உப்புவெளியில் உள்ள புனரமைப்பு முகாம்களில் சில காலம் தங்க வைக்கப்பட்டு பின்னர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

இதனிடையே அகதிகள் பலர் தாம் தாயகம் திரும்பியதில் மகிழ்ச்சி தெரிவித்த போதிலும் போர் நடைபெறும் பகுதிக்கு தம்மை அரசு அனுப்ப எண்ணியிருப்பது குறித்து கவலை கொண்டுள்ளதாக பி. பி. ஸி செய்தியாளர் குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு ..

கள் பலர் அனுமதிக்கப்பட்டிருப்பதால் அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

### நெடுந்தீவிலிருந்து ..

அங்கிருந்து புறப்பட்டு நண்பகல் 12மணியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

அங்கிருந்து இவர்கள் செஞ்சிலுவைச்சங்க மூலம் யாழ்ப்பாணம் வந்தனர். (19)

### சீனன்குடா.. ...

யிருந்தன. மேற்பகுதி விசிறிகள (Fan) முறிந்து காணப்பட்டன. ஹெலிகப்டர் விமானிக்கு முன்பாக இருக்கும்கண்ணாடிகள் சிதைந்திருந்தன

ஹெலிகப்டர் ஒன்றின் 50 கலிபர் துப்பாக்கியின் குழாய்ப் பகுதி பல யார் தூரங்களுக்கு அப்பால் காணப்பட்டது.

சி பிளேன்களின் செட்டைகளை Wing காணவில்லை, ஒரு விமானத்தின் சக்கரம் கிழிந்த நிலையில் காணப்பட்டது.

இராணுவ போக்குவரத்து விமானங்களின் உடல் பகுதியிலும் பாரிய துவாரங்களை காணக்கூடியதாக இருந்தது.

தளத்தின் ஓடுபாதையிலும் பல குழிகள் காணப்பட்டன. பல இடங்களில் விமானங்களின் சிதறிய பாகங்கள் காணப்பட்ட போதிலும் அவை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

விமானத்தளக்கட்டிடங்கள் விமானங்களின் சேதங்களை ரூபவாஹினி காட்டிய போதிலும் படையினரின் சடலங்கள் எதுவும் காட்டப்படுவது தவிர்க்கப்பட்டது.

சீனன்குடா விமானத்தள குண்டுவெடிப்பினால் அரசுக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது என ரூபவாஹினி குறிப்பிட்டது,

விமானப்படைச் சிப்பாய் ஒருவர் தகவல் தருகையில் நேற்று முன்தினம் காலை 11. 50 மணியளவில் பெரும் குண்டுச் சத்தம் கேட்டதாகவும் தொடர்ந்து அரைமணி நேரம் ஒரே புகைமண்டலமாகக் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## நாவற்குழி அகதி முகாமுக்கு செஞ்சிலுவைசங்கம் உதவி

நாவற்குழி அகதிமுகாமில் தங்கியிருக்கும் 531 குடும்பங்களுக்கு 2000 ரூபா பெறுமதியான உடுபிடவைகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பெற்சீற், சீலை துவாய், ரிசேட், சறம், துணிகள் அடங்கிய பார்சல்கள் வழங்கப்பட்டன.

இதே முகாமிலுள்ள 500 குடும்பங்களுக்கு அரிக்கன் விளக்குகளும் வழங்கப்பட்டன 06

### கிளிநொச்சி தபால்கள்

கிளிநொச்சி மாட்டத்துக்கான வெளி மாவட்ட தபால்கள் வாரத்தில் ஒரு நாள் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் எடுத்துவரப்படுகின்றன.

வவுனியாவுக்கு ரயில் மூலம் வரும் இம்மாவட்டக் கடிதங்கள் வாரதில் ஒருநாள் எடுத்து வரப்படுகின்றன. (06)

### கெயர் ஸ்தாபனம் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு கெயர் ஸ்தாபனம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விவசாய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

முதலை மார்க் மண்வெட்டிகள், பூவாளி, நீர் இறைக்கும் இயந்திரம் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இதனால் இம் மாவட்டத்தில் 2200 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். (08)

### கலை பண்பாட்டுக் கழகக் கூட்டம்

வலிகாமம் மேற்கு கலை பண்பாட்டுக் கழக மாதாந்த விசேட பொதுக்கூட்டம் இன்று மாலை 4மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (18)

### கடத்தல்

தாய்லாந்து பிரஜை ஒருவர் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கடத்தி வந்தபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பகுதியினரிடம் அகப்பட்டார்.

இவர் பல தடவைகள் இலங்கைக்கு வந்து போகிறவர் என விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

O/L
க. பொ. த. சாதாரணதரம்
(ஆண்டு II)
★ பகல் முழு நேர வகுப்புகள்
★ சனி, ஞாயிறு வகுப்புகள்
★ மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்
25 - 01 - 92
(சனி காலை 7-45 மணி)
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
இதை விடத் தெரிவு......
வேறேதுமில்லை!
01062

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 23-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது